[1967 ஜூலை 3

4. ஒழுங்குப் பிரச்சினைகள்

(அ) சட்டப் பேரவை நடவடிக்கைகள் குறிப்பு நகல் நூல்கத்தில் வைக்கப்படாமை.

(இ) பேரவை நிகழ்ச்சிகள் தொடங்குமுன் கட்சித் தலைவர்களுடன் பேரவைத் தலைவர் கலந்து பேசுதல்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : கனம் துணைத் தலைவர் அவர்களே, உங்களுடைய கவனத்திற்கும், இந்தச் சபையின் கவனத்திற்கும், சில விஷயங்களை, அவை பற்றிய என்னுடைய ஆலோசனைகளை முன் வைக்க விரும்புகிறேன். கடந்த இரண்டு நாட்களாக எப்போதும் இருந்து வந்த ஒரு மரபு மாற்றப்பட்டிருக்கிறது. இந்தச் சபையிலே நடக்கும் நடவடிக்கைகள், அன்றாடம் இந்த அவையின் லைப்ரெரியில் அங்கத்தினர்களுடைய சௌகரியத்திற்காக, எல்லா நடவடிக்கைகளையும் அறிந்துகொள்ளும் வகையில், இந்த நடவடிக்கைகளின் காப்பி ஒன்று லைப்ரெரியில் வைப்பது வழக்கம். இரண்டு நாட்களாக அப்படி வைக்கப்படவில்லை. அங்கத்தினர்கள் என்ன பேசினார்கள் என்று தெரிந்துகொள்ளும் வாய்ப்பு இல்லாமல் போய் விட்டது. அந்த வகையில் அங்கத்தினர்களுக்கு ஒரு உரிமை இருந்தது. மற்ற அங்கத்தினர்கள் என்ன பேசினார்கள் என்பதைப் பார்ப்பதற்கு இருந்த வசதியைக் குறைக்கக்கூடிய வகையில், அங்கத்தினர்களுடைய உரிமை பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அப்படி இரண்டு நாட்களாக இல்லாததன் காரணம் என்ன என்று தெரியவில்லை. கனம் சபாநாயகர் அப்படி இட்ட உத்தரவோ என்னவோ, யார் உத்தரவோ என்று தெரியாமல் இருப்பதால், அந்த லைப்ரெரி காப்பி வைப்பதை மீண்டும் வைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று. அநேகமாக தினமும், சட்டசபை ஆரம்பிப்பதற்கு முன்னால், சில நிமிஷங்கள், எதிர்க்கட்சித் தலைவர்களோடு, லீடர் ஆப் தி ஹவுஸும், சபாநாயகரும் கலந்து பேசி அன்றாட நடவடிக்கைகள் பற்றித் தீர்மானிப்பது வழக்கம். இப்பொழுது பார்க்கும்போது, பிஸினஸ் அட்வைசரி கமிட்டி கூடுவதோடு சரி. அன்றாடம், என்ன வேலை செய்யப்போகிறோம், மாலை நேரத்தில் சபை கூடவேண்டுமா என்பதையெல்லாம் அன்றாடம் கவனிப்பதில்லை. சட்டசபை கூடுவதற்கு 10 நிமிஷங்களுக்கு முன்னால், அன்றாட நடவடிக்கைகளைத் தீர்மானிப்பது சிறந்ததாக இருக்கும்.

ஆகவே, இந்த இரண்டு விஷயங்களிலும் தாங்கள் தங்களுடைய ஆலோசனையைக் கொடுக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் : சபை முதல்வர் ஏதாவது கூற வேண்டுமென்றால் கூறலாம்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவரவர்களே, முதல் கருத்து பற்றி என்ன நிலைமை இருக்கிறது என்று தெரியவில்லை. அது குறித்து ஏற்கெனவே என்ன மரபுகள் இருக்கின்றனவோ அந்த மரபுகளை ஆராய்ந்து பார்த்து இந்த நிலைமைகளுக்கு என்ன காரணம் என்பதுபற்றித் தக்க முடிவுகள் எடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

இரண்டாவது கருத்தைப் பொறுத்தவரையில், அப்படிப்பட்ட தடை எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. நாமாக, சாதாரணமாகப் போய் ஏதாவது கேட்டுக்கொள்ளவேண்டுமென்ற விதி முறை இல்லை. தேவைப் படுகின்றபொழுது எதிர்க்கட்சித் தலைவர்வர்களோ மற்றக் கட்சித் தலைவர்களோ, அவை முதல்வரோ பேரவைத் தலைவரிடம் சென்று பேசுவதும் உண்டு. வேண்டாமென்ற எந்தத் தடையும் இல்லை. அது மட்டுமல்லாமல், பேரவை ஒத்தி வைப்பது, மாலை நேரத்தில் பேரவைக் கூட்டம் நடத்துவது ஆகியவைகளை நீங்கள் இங்கேயே கலந்து பேரவைத் தலைவர் அவர்களிடத்தில் தெரிவித்து அவர் முடிவு எடுக்கின்ற நிலைமைதான் இருந்து வருகிறது. இதற்குத் தடை எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே,

எதிர்க் கட்சித் தலைவரவர்களோ, மற்றக் கட்சித் தலைவர்களோ, அவை முதல்வரோ பேரவைத் தலைவரவர்களைச் சபை கூடுவதற்கு முன்னால் சந்தித்து சில கருத்துக்களைத் தெரிவிக்க இன்னமும் வாய்ப்பிருக்கிறது என்று கருதுகிறேன். ஆகவே, அது பற்றிய நிலைமையொன்றும் விபரீதமாகப் போகவில்லை. எப்பொழுதும் இருக்கின்ற மரபு காப்பாற்றப்பட்டு வருகிறது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு துணைப் பேரவைத்தலைவர் : இங்கே இந்தப் பேரவையில் பேசுகின்ற உறுப்பினர்களுடைய பேச்சுக்கள் நூல் நிலையத்தில் வைக்கப்படுகின்ற மரபு இப்பொழுது இல்லை என்ற கருத்தை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் கூறினார்கள். அது பற்றி என்ன நிலைமை என்பதை நான் ஆராய்ந்து நாளை அதற்கு முடிவு கூறுகின்றேன்.

அடுத்து, சபாநாயகரவர்கள் எதிர்க்கட்சிகளின் தலைவர்களை அன்றாடம் அழைத்துப் பேசுவது வழக்கம் என்று சொன்னார்கள். அன்றாடம் பேசுவது வழக்கமில்லை. வேண்டும்போது அழைத்துப் பேசுவது வழக்கமாக இருக்கிறது. பேசுவதற்கு வேண்டிய ஒரு நிலைமை எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்கோ மற்றக் கட்சித் தலைவர்களுக்கோ உண்டாகுமானால் அது பற்றி சபாநாயகரவர்கள் அழைத்துத்தான் பேச வேண்டுமென்று இல்லாமல் அவர்களேகூடச் சென்று அவர்களை நேரில் கலந்து பேசிக்கொள்ளலாம். ஆக, இதுபற்றிய குறிப்புகளை இந்தச் சபையில் கொண்டுவர வேண்டுமென்பது தேவைதானா என்பதைச் சிந்தித்துப் பார்க்குமாறு நான் எதிர்க்கட்சித் தலைவரவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகவே, அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் எந்த முறையில் நடைபெற வேண்டுமென்ற மரபுகளை நாம் ஏற்படுத்திக்கொள்ளலாம்.

அடுத்து, மானியக் கோரிக்கையை எடுத்துக்கொள்ளுவோம். இப்பொழுது மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள், கவர்னர் அவர்களின் பரிவுரையின் மேல் நிலவரித் துறைக்கான மானியம் கோருவார்கள்.

5. 1967-68-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண் I—நிலவரித்துறை.

கோரிக்கை எண் IV—முத்திரைத்தாளைகள் நிர்வகம்.

கோரிக்கை எண் XXXI—பஞ்சத்தணிப்பு.

கோரிக்கை எண் XXXVII—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர்களே கவர்னர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட
1 தீர்மானத்தை முன் மொழிகிறேன்,

"கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,31,91,400-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் அவர்களே கவர்னர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்:—

"கோரிக்கை எண் IV—முத்திரைத்தாள்கள் நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 24,47,500-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர்களே கவர்னர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"கோரிக்கை எண் XXXI—பஞ்சத் தணிப்பு என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,36,15,700-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."